(7) அரசினர் சட்ட முன்வடிவு.

முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவை'' அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.
என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(8) 1978–79 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து நிதியமைச்சர் அவர்கள் 1978–79 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அவையில் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் 60·20 கோடி ரூபாய்க்கும், மூலதன, கடன் கணக்குகளில் 131·88 கோடி ரூபாய்க்கும் ஆக மொத்தமாக 192·08 கோடி ரூபாய்க்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. சென்ற ஆண்டு பெய்த பெரு மழையினால், நீலகிரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்யும் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். சாலைச் சீரமைப்புப் பணிகளுக்காக 3·86 கோடி ரூபாயும், பாசன வசதிகளைச் சீரமைக்க 2.75 கோடி ரூபாயும் இவற்றில் குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகளாகும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக நகராட்சிகளுக்கும் மானியமாக 1·12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

[திரு. கி. மனோகரன்] [1979 மார்ச் 20

3. மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் படி சம்பள விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டதால் ஒவ்வொரு மானியத்தின் கீழும் கூடுதல் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இதற்காக, 1978—79 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், ''மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை'' என்ற தலைப்பின் கீழ் மொத்தமாக 30 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்த போதிலும், மானியக் கோரிக்கைகள் இடையே மறு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாத காரணத்தால், ஒவ்வொரு மானியத்தின் கீழும் கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. ''மானியக் கோரிக்கை எண். 43— பல்வகை'' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 30 கோடி ரூபாய் தொகையையும் தற்போது கூடுதலாகக் கோரப்படும் தொகைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சம்பள விகிதங்களுக்காகக் கோரப்பட்டுள்ள தொகை குறைந்த அளவே கூடுதல் ஆகும்.

4. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கூடுதலாகத் தொகை தேவைப்படுகின்ற வேறு சில இனங்களுக்கும், சில புதிய திட்டங்களுக்கும் அவையின் அனுமதி கோரப்படுகிறது. மத்திய அரசு உதவியுடன் 146 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும், இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் 45 இட்சம் ரூபாய் செலவில் மீன் பிடி கிராமங்களில் வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டமும், சென்னையில் மீனைப் பதப்படுத்வும், விற்பனை செய்வதற்காகவும், சின்ன முட்டம் கிராமத்தில் மீனள வளர்ச்சிக்காகவும், மத்திய அரசின் உதவியுடன் 110 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தும் திட்டமும் இவற்றில் குறிப்பிடத் தக்கவையாகும்.

5. சேலம், வட ஆற்காடு, கோயம்புத்தூர், தென் ஆர்காடு தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் சில தொழில் துறைகளில் பணியாற்றிவரும் சுமார் 31,000 தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க, 19·55 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலாளர் நலன் காப்புறுதித் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. நாகூரிலும், ஸ்ரீரங்கத்திலும் புதிய மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டவும் மருத்துவமனைக் கட்டிடங்களைச் சீரமைக்கவும் 12.25 இலட்சம் ரூபாய் செலவிட துணை மதிப்பீடுகளில் அனுமதி கோரப்பட்டுள்ளது. பத்து கிராமப்புற குடும்பநல நிலையங்களுக்கும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு 27.3 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டி இவ்வாண்டு செயல்படுத்த வழிவகை செய்துள்ளது.

6. தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து பணிகளை மேற்கொள்வதற்காக கூடுதலாக, தமிழ்நாடு தொழில் மூதலீட்டுக் கழகத்திற்கு 1 கோடி ரூபாயும், தமிழ்நாடு தொழில் மேம்

1979 மார்ச் 20] [திரு. கி. மனோகரன்]

பாட்டுக் கழகத்திற்காக 90 இலட்சம் ரூபாயும் மூலதனமாக அரசு அனுமதித்து உள்ளது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கடன் பெறும் வசதிகளைப் பெருக்கு வதற்காக, இவ்வாண்டு அரசு மூலதனமாக 3 கோடி ரூபாய் மூதலீடு செய்ய, இந்தத் துணை மதிப்பீடுகளில் அவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

7. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு புதி தாகக் கப்பல்கள் வாங்குவதற்காக 3 கோடி ரூபாயும், அரசின் போக்குவரத்து நிறுவனங்கள் பேருந்து வாங்க நிதியுதவி அளிப் பதற்காக, தமிழ் நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழக திற்கு மூலதனமாக 50 இலட்சம் ரூபாயும், கடனாக 50 இலட்ச ரூபாயும் வழங்க அரசு வகை செய்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கடனாக 10 இலட்ச ரூபாயும். தமிழ் நாடு திரைப்பட அரங்கு நிறுவனத்திற்கு 10 இலட்ச ரூபாயும் கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங் களில் வீட்டு வசதியைப் பெருக்கும் திட்டத்தை மூனைப்பாகச் செயல்படுத்த தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு இவ்வாண்டு கூடுதலாக 1 கோடி ரூபாய் மூலதனமாகவும், 2 கோடி ரூபாய் கடனாகவும் அரசு வழங்கியுள்ளது.

8. அரசின் பல்வேறு நிறுவனங்கள், இவ்வாண்டு தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளவும், வரும் ஆண்டில் செயல்பட இருக் கும் திட்டப் பணிகளுக்கு முன் நடவடிக்கைகள் எடுக்கவும் உதவு வண்ணம் வழிவகை முன் பணம் அளிக்க, இந்தத் துணை மதிப் பீடுகளில் அனுமதி கோரப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 25 கோடி ரூபாயும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 7 கோடி ரூபாயும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 10 கோடி ரூபாயும், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 11 கோடி ரூபாயும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு 20 கோடி ரூபாயும், சென்னை மாநகராட்சிக்கு 2 கோடி ரூபாயும் வழங்க துணை மதிப்பீடுகளில் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த வழி வகை முன் பணங்கள் வரும் ஆண்டில் இந்த நிறுவனங்களால் அரசுக்குத் திருப்பப்படுமாதலால், அரசுக்கு நிகரச் செலவு ஏதும் ஏற்படாது.

9. இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெறும் சில முக்கியத் திட்டங்களைக் குறிப்பிட்டுள்ளேன். பிற திட்டங் களைப் பற்றிய குறிப்புகள் அவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் துணை மதிப்பீடு களை ஏற்க வேண்டுமென்று அவையை வேண்டி அமருகிறேன்.